RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025





சிவகங்கை | மலர்-4 | இதழ்-79 | 26 மார்ச் | புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## "மன்னிப்பு கேட்க மாட்டேன், இந்தக் கும்பலைக் கண்டு பயம் கொள்ளவில்லை" காமெடியன் குணால் கம்ரா

மும்பை, மார்ச்.26

மகாராஷ்டிர துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டேவை நகைச்சுவையாக விமர்சித்ததை அடுத்து ஆளும் கூட்டணியின் எதிர்ப்புக்கு உள்ளாகி உள்ள ஸ்டாண்ட் அப் காமெடியன் குணால் கம்ரா, தனது பேச்சுக்காக மன்னிப்பு கேட்க மாட்டேன் என்றும், இந்த கும்பலைக் கண்டு தான் பயம் கொள்ளவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "எனக்கு எதிராக எடுக்கப்பட்ட எந்தவொரு சட்டப்பூர்வ நடவடிக்கைக்கும் காவல்துறை மற்றும் நீதிமன்றங்களுடன் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறேன். நான் மன்னிப்பு கேட்க மாட்டேன். அஜித் பவார் (முதல் துணை முதல்வர்) மற்றும் ஏக்நாத் ஷிண்டேவைப் (2வது துணை முதல்வர்) பற்றித்தான் நான் பேசினேன். இந்தக் கும்பலைக் கண்டு நான் பயம் கொள்ளவில்லை. நான் என் படுக்கையின் கீழ் ஒளிந்துகொண்டு, பிரச்சினை ஓயட்டும் என காத்திருக்க மாட்டேன்.

ஹாபிடேட் ஸ்டுடியோவிற்குள் நுழைந்து சிவசேனா தொண்டர்கள் அதை நாசப்படுத்தி இருக்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, ஒரு பொழுதுபோக்கு இடம் வெறும் ஒரு தளம். எல்லா வகையான நிகழ்ச்சிகளுக்குமான இடம் அது. எனது நகைச்சுவைக்கு ஹாபிடட் (அல்லது வேறு எந்த இடம்) பொறுப்பல்ல. ஒரு நகைச்சுவை நடிகரின் வார்த்தைகளுக்காக ஒரு இடத்தைத் தாக்குவது தக்காளி ஏற்றிச் செல்லும் லாரியை கவிழ்ப்பது போன்ற முட்டாள்தனம்.

எனக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என அச்சுறுத்தும் அரசியல் தலைவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, இன்றைய ஊடகங்கள் எங்களை வேறுவிதமாக நம்ப வைக்க முயற்சித்தாலும், பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்திற்கான நமது உரிமை, சக்திவாய்ந்தவர்களையும் பணக்காரர்களையும் விமர்சிக்கக்கூடாது என்பதையே. எனக்குத் தெரிந்தவரை, நமது தலைவர்களையும் நமது அரசியல் அமைப்பான சர்க்கஸையும் வேடிக்கை பார்ப்பது சட்டத்திற்கு எதிரானது அல்ல.

நகைச்சுவையால் புண்படுத்தப்பட்டால், நாசவேலை தான் அதற்கு சரியான பதில் என்று முடிவு செய்தவர்களுக்கு எதிராக சட்டம் நியாயமாகவும் சமமாகவும் பயன்படுத்தப்படுமா? இன்று ஹாபிடேட் ஸ்டுடியோவுக்கு முன்னறிவிப்பு இல்லாமல் வந்து, அந்த இடத்தை இடித்த மும்பை மாநகராட்சியின் நடவடிக்கை மற்றவற்றுக்கு எதிராகவும் இருக்குமா? ஒருவேளை எனது அடுத்த இடத்தை, எல்பின்ஸ்டோன் பாலம் அல்லது மும்பையில் விரைவாக இடிக்கப்பட வேண்டிய வேறு எந்த கட்டமைப்பையும் நான் தேர்வு செய்வேன்." என்று தெரிவித்துள்ளார்.

## 'எக்காரணம் கொண்டும் மும்மொழிக் கொள்கையை ஏற்க மாட்டோம்' சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் உறுதி

சென்னை, மார்ச்.26

"எக்காரணத்தை கொண்டும் மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ளமாட்டோம்" என்று சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் உறுதியாக கூறியுள்ளார்.



சட்டப்பேரவையில் மும்மொழிக் கொள்கை திணிப்பை எதிர்க்கும் கவன ஈர்ப்பு தீர்மானம் மீதான விவாதத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலளித்துப் பேசினார். இது குறித்து அவர் பேசுகையில், "எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி டெல்லிக்கு சென்றுள்ளதாக செய்திவந்துள்ளது. டெல்லிக்குச் செல்லும் எடப்பாடி பழனிசாமி, அங்கு சந்திப்பவரிடம் இருமொழிக்கொள்கை குறித்து வலியுறுத்த வேண்டும்.

தமிழும், ஆங்கிலமும் தான் தமிழகத்தின் இருமொழிக் கொள்கை. அதில் எந்த மாற்றமும் இல்லை. எக்காரணத்தை கொண்டும் மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று ஒன்றிய அரசுக்கு விளக்கமளித்து இருக்கிறோம். அதில் எந்த சந்தேகமும் வேண்டாம்.

இந்தியை ஏற்காவிட்டால் பணம் தர மாட்டோம் என்று மிரட்டினாலும், பணமே வேண்டாம் என தாய்மொழியை காப்போம் என்ற உறுதியை வலியுறுத்தினேன். இரண்டாயிரம் கோடி என்ன, பத்தாயிரம் கோடி கொடுத்தாலும் மும்மொழிக் கொள்கையை ஏற்க மாட்டேன் என தெரிவித்திருக்கிறேன். இது பணப் பிரச்சினை அல்ல இனப் பிரச்சினை. நிதி தரவில்லை என இனமானத்தை அடமானம் வைத்து வெகுமானம் பெரும் கொத்தடிமைகள் நாங்கள் அல்ல. தடைக்கற்கள் உண்டென்றால் அதை உடைத்தெறியும் தடந்தோள் உண்டென்று சொல்லும் திராவிட மாடல் ஆட்சி இது.

யார் எந்த மொழியை கற்பதிலும் தடையாக இருப்பதில்லை. அதே வேளையில், தமிழை அழிக்கும் ஆதிக்க மொழி எதுவாக இருந்தாலும் அதை அனுமதிக்க முடியாது. மூன்றாவது மொழியை திணிக்க அனுமதித்தால், அது நம்மை மென்று தின்றுவிடும் என்று வரலாறு உணர்த்துகிறது. இந்தி மொழி திணிப்பு என்பது, பண்பாட்டு அழிப்பாக அமையும் என்பதால் தான் இந்தியை எதிர்க்கிறோம். இந்த மொழித் திணிப்பின் மூலமாக மாநிலங்கள், மாநில மொழிகள் மூலம் ஒரு இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்த நினைக்கிறார்கள்.

இதற்கு முற்றுப் புள்ளி வைத்தாக வேண்டும். மாநிலங்களை தங்களது கொத்தடிமை தொகுதிகளாக நினைப்பதால்தான், இது போன்ற மொழி திணிப்புகளும், நிதி அநீதிகளையும் செய்கிறார்கள். மாநில சுயாட்சியை உறுதி செய்து மாநில உரிமைகளை நிலைநாட்டினால்தான் தமிழ் மொழியை காக்க முடியும், தமிழினத்தை உயர்த்த முடியும். இதற்கான அறிவிப்பை விரைவில் வெளியிடுவேன் என உறுதியளிக்கிறேன்." என்றார்.

## நடிகர் 'கராத்தே' ஷிஹான் ஹுசைனி காலமானார்

சென்னை: , மார்ச்.26

உடல்நலக்குறைவால் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நடிகரும் வில்வித்தை பயிற்சியாளருமான ஷிஹான் ஹுசைனி சிகிச்சை பலனின்றி காலமானார். அவருக்கு வயது 60. ரத்த புற்றுநோய் பாதிப்பு காரணமாக அவர் உயிரிழந்தார்.



மதுரையை சேர்ந்தவர் ஷிஹான் ஹுசைனி. கராத்தே மாஸ்டரான இவர் பல படங்களில் நடித்துள்ளார். இயக்குநர் கே.பாலச்சந்தரின் புன்னகை மன்னன் படத்தில் அறிமுகமான இவர், நடிகர் விஜய் நடித்த 'பத்ரி' படத்தில் அவருக்கு கராத்தே சொல்லிக் கொடுக்கும் மாஸ்டராக நடித்திருந்தார். அதைத்தொடர்ந்து பலருக்கும் வில்வித்தை பயிற்சியும் அளித்துள்ளார். அந்தவகையில் இதுவரை 400க்கும் மேற்பட்ட வில்வித்தை வீரர்களுக்கு பயிற்சி அளித்து, தமிழகத்தில் நவீன வில்வித்தைக்கு முன்னோடியாக திகழ்ந்தவர்.

தமிழகத்தில் வில்வித்தையில், 'ரீகர்வ் வில் (1979)', 'காம்பவுண்ட் வில் (1980)' ஆகியவற்றை அறிமுகப்படுத்தியவரும் ஷிஹான் ஹுசைனி தான். அண்மையில் ரத்த புற்றுநோய் பாதிப்பால் தன் உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாக ஊடகங்களின் வாயிலாக அவர் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் அவரது கோரிக்கையை ஏற்று மருத்துவ சிகிச்சை பெற தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நிதியிலிருந்து ரூ.5 லட்சத்துக்கான காசோலை வழங்கப்பட்டது.

இந்த சூழலில் அவர் சிகிச்சை பலனின்றி அவர் காலமானார். அவரது உடலை தானம் செய்வதாக சமீபத்தில் அவர் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. அவரது உடல் சென்னையில் உள்ள அவரின் வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அவரது மறைவுக்கு கராத்தே மற்றும் வில்வித்தை விளையாட்டு வீரர்கள், திரை உலகினர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

## நீதிபதி யஷ்வந்த் வர்மா இடமாற்றம் அலகாபாத் உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் வேலைநிறுத்தம்

புதுடெல்லி, மார்ச்.26

டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதி யஷ்வந்த் வர்மாவை, அலகாபாத் உயர் நீதிமன்றத்திற்கு மாற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அலகாபாத் உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம் நேற்று (மார்ச் 25) காலவரையற்ற வேலைநிறுத்தத்தைத் தொடங்கியது.



அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் 3வது வாயிலில் கூடி வழக்கறிஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்துக்கு தலைமை தாங்கிய வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் அனில் திவாரி, பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர், "இந்தப் போராட்டம் எந்த நீதிமன்றத்துக்கும் அல்லது நீதிபதிக்கும் எதிரானது அல்ல. ஆனால், நீதித்துறை அமைப்புக்கு களங்கம் விளைவித்தவர்களுக்கு எதிரானது.

ஊழலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகவும், வெளிப்படைத் தன்மை இல்லாத ஒரு அமைப்புக்கு எதிராகவுமானது எங்கள் போராட்டம். இப்போதைக்கு எங்கள் கோரிக்கை, உச்ச நீதிமன்ற கொலீஜியம் தனது முடிவை மறுபரிசீலனை செய்து இடமாற்ற உத்தரவை திரும்பப் பெற வேண்டும் என்பதே.

இந்த விவகாரத்தில் முழுமையான போராட்டத்திற்கு சங்கம் தயாராக இருக்கிறது. ஆரம்பத்திலிருந்தே, இந்த விஷயத்தை மூடிமறைக்க முயற்சி நடந்து வருகிறது. இன்று, இந்தியா முழுவதும் வழக்கறிஞர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஒரு தீர்வு எட்டப்படும் வரை, விளைவுகள் எதுவாக இருந்தாலும், நாங்கள் மீண்டும் பணியைத் தொடங்க மாட்டோம்." என தெரிவித்தார்.

நீதிபதி யஷ்வந்த் வர்மாவின் அதிகாரப்பூர்வ டெல்லி இல்லத்தில் கடந்த 14ம் தேதி ஏற்பட்ட தீ விபத்தை அடுத்து, அங்கு சென்ற தீ அணைப்புத் துறையினர் அங்கு கட்டுக் கட்டாக எரிந்த ரூபாய் நோட்டுகள் இருப்பதைக் கண்டு அது குறித்து காவல்துறைக்கு தெரிவித்தனர். பின்னர், காவல் துறையினர் அதனை உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு தெரிவித்தனர். இதையடுத்து, இந்த விவகாரம் குறித்து விசாரிக்க உச்ச நீதிமன்ற கொலீஜியம் மூவர் குழு ஒன்றை அமைத்தது. மேலும், நீதிபதி யஷ்வந்த் வர்மாவை அலகாபாத் உயர் நீதிமன்றத்திற்கு மாற்ற கடந்த 20ம் தேதி பரிந்துரைத்தது.

இந்த பரிந்துரைக்கு அலகாபாத் உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம் எதிர்ப்பு தெரிவித்தது. இது தொடர்பாக அலகாபாத் உயர் நீதிமன்ற வழக்கறிஞர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில், அலகாபாத் உயர் நீதிமன்றம் ஒன்றும் "குப்பைத் தொட்டி" அல்ல என்று தெரிவித்தது. மேலும், இடமாற்றம் நடந்தால், அலகாபாத் உயர் நீதிமன்ற வழக்கறிஞர் சங்கம், காலவரையின்றி வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் என்றும் அச்சுறுத்தியது. இதையடுத்து, நீதிபதி யஷ்வந்த் வர்மாவை அலகாபாத் உயர் நீதிமன்றத்துக்கு இடமாற்றம் செய்யும் பரிந்துரையை கொலீஜியம் நிறுத்திவைத்தது.

இந்நிலையில், "சிறந்த நீதி நிர்வாகத்திற்காக" நீதிபதி யஷ்வந்த் வர்மாவை தலைநகர் டெல்லிக்கு வெளியே மாற்ற வேண்டும் என்று டெல்லி உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி டி.கே. உபாத்யாயா கேட்டுக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து, இந்த விவகாரம் குறித்து விவாதிக்க நேற்று மீண்டும் கூடிய உச்ச நீதிமன்ற கொலீஜியம், நீதிபதி யஷ்வந்த் வர்மாவை அலகாபாத் உயர் நீதிமன்றத்திற்கு மாற்ற பரிந்துரைத்தது. நீதிபதி வர்மா, ஏற்கெனவே அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் இருந்து டெல்லி உயர் நீதிமன்றத்துக்கு மாற்றலாகி வந்தவர் என்பதால், அவரை திருப்பி அனுப்ப முடிவெடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

முன்னதாக, நீதிபதி யஷ்வந்த் வர்மாவின் அனைத்து நீதித்துறைப் பணிகளும் மறு உத்தரவு வரும் வரை திரும்பப் பெறப்படுவதாக டெல்லி உயர் நீதிமன்றம் ஒரு சுற்றறிக்கை வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

## மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு

சென்னை, மார்ச்.26

தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் இன்றும், நாளையும் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.



இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தென்னிந்திய பகுதிகளின் மேல், வளி மண்டல கீழடுக்கு பகுதிகளில், கிழக்கு மற்றும் மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுகிறது. பூமத்திய ரேகையை ஒட்டிய இந்திய பெருங்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக இன்றும் (மார்ச் 25), நாளையும் மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இதர மாவட்டங்களில் வறண்ட வானிலை நிலவக்கூடும். மார்ச் 27 முதல் 30ம் தேதி வரை தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

தமிழகத்தில் 26 முதல் 28ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தைவிட 5 டிகிரி ஃபாரன்ஹீட் அதிகமாக இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மழைக்கு வாய்ப்பில்லை.

தமிழகத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக விழுப்புரத்தில் 5 செமீ, விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம், ஈரோடு மாவட்டம் குண்டேரிப்பள்ளம், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் தலா 3 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி திடீர் டெல்லி பயணம்

சென்னை, மார்ச்.26

தமிழக எதிர்க்கட்சித் தலைவரும் அதிமுக பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி நேற்று (மார்ச் 25) திடீரென டெல்லி பயணம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது. இது தமிழக அரசியல் வட்டாரத்தில் கவனம் பெற்றுள்ளது.



தமிழக சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி எவ்வித முன்னறிவிப்பும் இன்றி திடீரென டெல்லிக்கு புறப்பட்டுள்ளார். இந்தப் பயணம் குறித்து அதிமுக தரப்பில் இதுவரை எவ்வித அறிவிப்பும் இல்லை.

அலுவலகத்தைப் பார்வையிடவா? அதிமுக சார்பில் கடந்த மாதம், புதுடெல்லியில் ரூ.10 கோடியில் 4 தளங்களுடன் கட்டப்பட்ட அதிமுக அலுவலக கட்டிடத்தை காணொலி வாயிலாக கட்சியின் பொதுச்செயலாளர் பழனிசாமி திறந்துவைத்தார். அந்த அலுவலகத்தைப் பார்வையிடவே எடப்பாடி பழனிசாமி செல்வதாகக் கூறப்படுகிறது.

இருப்பினும் எவ்வித அறிவிப்புமின்றி எடப்பாடி பழனிசாமி திடீரென பயணம் மேற்கொள்வது கவனம் பெற்றுள்ளது. ஏனெனில் அடுத்த ஆண்டு (2026 மே) தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறுகிறது. இத்தேர்தலுக்கான கூட்டணிகள் மீது பெரும் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

பாஜக தலைவர்களுடன் சந்திப்பா? மீண்டும் அதிமுக பாஜக கூட்டணி அமையலாம் என்று கூறப்படுகிறது. இதனை இபிஎஸ் ஆமோதிக்கவும் இல்லை, மறுக்கவும் இல்லை. சேலத்தில் அண்மையில் இபிஎஸ் அளித்த பேட்டியொன்றில் பாஜகவுடன் கூட்டணி அமையுமா? என்ற கேள்விக்கு, "எந்தக் கட்சியுடன் கூட்டணி என்பதால் தேர்தல் நெருங்கும்போது நாங்களே அழைத்துச் சொல்லுவோம்." என்று கூறியிருந்தார். இதனால் அதிமுக தேர்தலில் பாஜக கூட்டணியை ஏற்படுத்துவதில் திறந்த மனதோடே இருப்பதாகக் கூறப்பட்டது. இந்நிலையில் தான் எடப்பாடி பழனிசாமி திடீர் டெல்லி பயணம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

இந்தப் பயணத்தின் போது பாஜக தலைவர்களை எடப்பாடி பழனிசாமி சந்திக்கவிருப்பதாகவும் கூறப்படுகிறது. இது திரைமறைவு சந்திப்பாக இருக்கலாம் என்றும் பேசப்படுகிறது. ஏற்கெனவே கோவையில் அமித் ஷாவை அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி சந்தித்துப் பேசியதாகக் கூறப்பட்டது. ஈஷா யோகா மையத்தில் நடந்த மகா சிவராத்திரி நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்திருந்த அமித் ஷாவை வேலுமணி சந்தித்தது பரபரப்பானது நினைவுகூரத்தக்கது. எடப்பாடியை தொடர்ந்து எஸ்.பி.வேலுமணியும் டெல்லி செல்கிறார் என்று கூறப்படுகிறது.

முதல்வர் கோரிக்கை: இந்நிலையில் தமிழக சட்டப்பேரவையில் இன்று பேசிய முதல்வர் ஸ்டாலின், "சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி டெல்லி சென்றுள்ளதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. டெல்லி சென்றுள்ள அவர் அங்கு யாரை சந்திக்கிறார் என்ற செய்தியும் எங்களுக்கு வந்திருக்கிறது. டெல்லியில் சந்திப்பவர்களிடம் இருமொழிக் கொள்கை பற்றி இபிஎஸ் பேச வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறேன். இனமானத்தை அடமானம் வைத்து வெகுமானம் பெறுபவர்கள் நாங்கள் அல்ல." என்றார்.



மதுரை மாவட்டம், சேடப்பட்டி ஊராட்சி ஒன்றியம், வேப்பம்பட்டி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் தொடர்பான சிறு புகைப்பட கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# காளையார்கோவில் ஒன்றியம் கீழக்கோட்டையில் பள்ளி ஆண்டு விழா






காளையார்கோவில், மார்ச்.26

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையின் பள்ளி ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. முன்னாள் கொட்டக்குடி ஊராட்சி மன்றத் தலைவர் வடிவேல் தலைமை வகித்தார். ஆசிரியர் பயிற்றுநர் ஜோதிமணி முன்னிலை வகித்தார். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி வரவேற்புரையாற்றினார். சிறப்பு விருந்தினர்களுக்கு பொன்துகில் அணிவிக்கப்பட்டு புத்தகம் வழங்கப்பட்டது. தலைமையாசிரியை தெய்வானை ஆண்டறிக்கை வாசித்தார். பள்ளி ஆசிரியர்களுக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது. கல்வி விளையாட்டு பள்ளிக்கு 100 சதவீத வருகை பெற்ற மாணவ மாணவிகளுக்கு பதக்கங்களும் பரிசுகளும் புத்தகங்களும் வழங்கப்பட்டு பாராட்டப் பெற்றனர். துளிர் திறனறிதல் தேர்வில் தேர்வு எழுதிய அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டனர். மாணவ மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகள் யோகா பிரமிடு ஆடல் பாடல்கள் தமிழ் பேச்சு ஆங்கில பேச்சு திருக்குறள் ஒப்புவித்தல் தமிழோடு பேசுதல் போன்ற கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது. பள்ளி மேலாண்மைக்குழு தலைவி நித்யா பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவி வசந்தமலர் வானவில் மன்ற கருத்தாளர் ஜெயப்பிரியா நன்கொடையாளர்கள் தமிழரசன் ஜெயந்தி தமிழ்செல்வம் வாழ்த்துரை வழங்கினர். 2025 2026 ஆம் கல்வியாண்டில் புதிதாக சேர்ந்த ஒன்றாம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு மாலை அணிவித்தும் பொன்துயில் அணிவித்தும் சிறப்பிக்கப்பட்டனர். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி நன்றி கூறினார். முன்னாள் பள்ளி மாணவ மாணவிகள் பெற்றோர்கள் பெரியோர்கள் ஊர் பொதுமக்கள் திரளாக

# பெருங்களத்தூர் தெற்கு பகுதி திமுக சார்பில் பொதுக்கூட்டம்



பெருங்களத்தூர் மார்ச் 26

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு பெருங்களத்தூர் தெற்கு பகுதி திமுக சார்பில் மாபெரும் பொது கூட்டம் நடைபெற்றது

தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் தெற்கு பகுதி திமுக சார்பில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு, பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் எஸ்.சேகர் தலைமையில் பெருங்களத்தூர் தெற்கு பகுதி துணை செயலாளர் பி.புகழேந்தி வரவேற்புரையில் நடைபெற்ற மாபெரும் பொது கூட்டத்தில் தாம்பரம் மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, தலைமை கழக பேச்சாளர்கள் கரூர் முரளி, செங்கை சந்தானம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இந்த நிகழ்ச்சியில் 4வது மண்டல குழு தலைவர் டி.காமராஜ், பொதுக்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.சங்கர், ஐசக் மற்றும் சாமுண்டீஸ்வரி பகுதி கழக நிர்வாகிகள், மாநகர, பகுதி, கழக அணிகளின் நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், மற்றும் பொது மக்கள் பங்கேற்றனர்.

# திருப்பூர் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மக்கள் குறைதீர் நாள் கூட்டம்

திருப்பூர்




திருப்பூர் மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

ஒவ்வொரு வாரமும் திங்கள் கிழமைகளில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அவை அனைத்தும் தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய தீர்வு காணப்பட்டு வருகிறது.

அந்த வகையில், இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்ப்பு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா மற்றும் முதியோர் உதவித்தொகை, புதிய குடும்ப அட்டை வேண்டியும், சாலை வசதி, குடிநீர் வசதி வேண்டியும் என பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 813 மனுக்களை பெற்றுக் கொண்டதுடன் மனுதாரர்கள் முன்னிலையிலேயே விசாரனை செய்து அதன் மீது உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் அறிவுறுத்தினார்கள்.


தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ் தாட்கோ சார்பில் 39 தூய்மைப் பணியாளர்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீடு அட்டைகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.15,750/ மதிப்பீட்டில் வீல்சேரும், 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.3,285/ மதிப்பீட்டில் காதொலி கருவியும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்னகுடியினர் நலத்துறையின் சார்பில் 03 பயனாளிகளுக்கு 03 இலவச தேய்ப்பு பெட்டிகளையும் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) சாம்சாந்தகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) ஜெயராமன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) பக்தவச்சலம், மாவட்ட வழங்கல் அலுவவலர் ரவிசந்திரன், மாவட்ட மேலாளர் (தாட்கோ) ரஞ்சித்குமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் கல்பனா, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் புஸ்பாதேவி, துணை ஆட்சியர்கள் மற்றும் அனைத்து அரசுத்துறைகளின் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கோத்தகிரி நெடுஞ்சாலை துறை சாலை பராமரிப்பு பணிகள்

கோத்தகிரி மார்ச் 26





நீலகிரி மாவட்டம் கோத்தகிரி நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் சங்கர்லால் மேற்பார்வையில் , கோத்தகிரியில் இருந்து. மேட்டுப்பாளையம் சாலைகள் இருபுறமும் வளர்ந்து வந்த முள் புதர்களை பணியாளர்களை அமைத்து முழு புதர்களை எல்லாம் அகற்றி. சாலையில் கனரக வாகனங்கள் செல்லும் பொழுது மரக்கிளைகள் அதன் மீது படாமல் இருக்க படர்ந்து வந்த மரக்கிளைகளை அகற்றி. சாலையில் ஓரத்தில் இருக்கும் குண்டு குழியை களை சமப்படுத்தி. பின்னர் சாலை ஓரத்தில் இருக்கும் பாறைகளுக்கு வெள்ளை வர்ணம் பூசப்பட்டது. மேலும் வாகனங்கள் செல்லும் தூரங்களை அளவிட்டு மயில் கற்களில் கடந்து செல்லும் தூரங்களை மயில் கல்லில் அளவீடு செய்தனர். வாகன ஓட்டிகள் கொண்டை ஊசி வளைவுகள் மற்றும் வேகத்தடைகளை குறிக்கும் மஞ்சள் போர்டுகளை. வர்ணம் தீட்டி வாசகம் எழுதப்பட்டது. இங்கு நடத்தப்பட்ட பணிகளை எல்லாம் உதவி பொறியாளர் ராஜேஷ் உடனிருந்து பார்வையிட்டார் இதை கண்ட பொதுமக்களும் வாகன ஓட்டிகளும் தடையின்றி செல்ல உதவி செய்த நெடுஞ்சாலை துறையினருக்கு மக்களும் சமூக ஆர்வலர்களும் நன்றி தெரிவித்தனர்..

# அஸ்தினாபுரத்தில் தவெக செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளருக்கு கோவிலில் சிறப்பு வழிபாடு மற்றும் நீர் மோர் பந்தல் திறப்பு விழா

அஸ்தினாபுரம் மார்ச்26





அஸ்தினாபுரத்தில் தவெக செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளர்க்கு கோவிலில் சிறப்பு வழிபாடு மற்றும் நீர் மோர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது

செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் தமிழக வெற்றி கழகத்தில் செயலாளராக பதவியேற்ற மின்னல் வி.குமார் மற்றும் புதிய பொறுப்பாளர்களுக்கு செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் அஸ்தினாபுரம் பகுதி தலைமை வே.ராஜகுமாரன் வழக்கறிஞர் முன்னிலையில் 38வது வார்டு தலைமை த.பிரேம் ராஜ், 22வது வார்டு கண்ணன், ஆனந்த குமார் ஏற்பாட்டில் அஸ்தினாபுரத்தில் மஹா சதுர் குன்று விநாயகர் கோவிலில் கும்பம் மரியாதை செலுத்தப்பட்டது

அதனைத் தொடர்ந்து தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் மற்றும் பொதுச் செயலாளர் புஸ்ஸி என். ஆனந்த் வழிகாட்டுதலின்படி செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் செயற்குழு உறுப்பினர் த.செந்துர்கனி தங்க கோபால் ஏற்பாட்டில் நீர் மோர் திறப்பு விழா 38வது வார்டில் நடைபெற்றது செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளர் மின்னல் வி குமார் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நீர் மோர் தர்பூசணி குளிர்பானங்கள் உள்ளிட்ட பொருள்களை வழங்கினார்கள் இதில் மாவட்ட கழக இணை செயலாளர் கே.மதன்குமார், மாவட்ட பொருளாளர் தம்பி ராஜா, மாவட்ட துணைச் செயலாளர் விஜய் அமிர்தராஜ், மாவட்ட துணைச் செயலாளர் சுனிதா ரமேஷ், செயற்குழு உறுப்பினர்கள் ரெபேக்கா, தேஷகுமார், ஆஷியா, சிவகுரு, பக்தவச்சல் ராவ், விஜய கணேஷ், ஈஸ்வர், பாலபிரசாத், தினேஷ் அஸ்தினாபுரம் பகுதி துணை செயலாளர் எம்.ரஞ்சித் குமார், 38வது வார்டு தலைமை கே.பிரதீப், எம்.சரவணன் மற்றும் அஸ்தினாபுரம் பகுதி நிர்வாகிகள் வார்டு நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# குடியாத்தம் அரசு மருத்துவமனையில் வழுக்கி விழுந்த மூதாட்டியை பாதுகாப்பாக மீட்ட வேலூர் மாவட்ட செய்தியாளருக்கு பாராட்டு

வேலூர் மார்ச் 26



வேலூர் மாவட்டம், அடுத்த காட்பாடி செங்குட்டை பகுதியை சேர்ந்தவர் முஜிப் ரகுமான், காஞ்சித் தலைவன் என்ற காலை நாளிதழியில் வேலூர் மாவட்ட செய்தியாளராகவும், சமூக ஆர்வலராகவும் இருந்து வருகின்றார். ரகுமான் வேலூர் மாவட்டம் குடியாத்தம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தனது நண்பரை பார்க்க சென்றிருந்தபோது, பெண் நோயாளி மூதாட்டி ஒருவர்பெண் கழிவறைக்கு சென்று திரும்பியபோது நிலை தடுமாறி வழுக்கி விழுந்தார். அங்கு இருந்த செய்தியாளர் முஜிப் ரகுமான் தனது நண்பருடன் ஓடி சென்று பாதுகாப்பாக தூக்கி வந்து குடிதண்ணீர் கொடுத்து உதவியதை அங்கிருந்தவர்கள் பாராட்டினர். இந்த மருத்துவமனையில் ஆண் மற்றும் பெண்கள் கழிவறை சுகாதாரமற்றவையாகவும், பாரமரிப்பின்றி இருப்பதாக நோயாளிகள் மருத்துவமனைக்கு வந்து செல்லும் நோயாளிகள் மற்றும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அசோசியேசன் சார்பாக நடைபெற்ற மாவட்ட அளவிலான சிலம்பாட்ட போட்டியில், வீரவிதை சிலம்ப அணி மாஸ்டர் கலைவளர்மணி டாக்டர் பெருமாள் தலைமையில் 34 மாணவர்கள் கலந்து கொண்டனர். இதில் 27 பேர் முதல் இடத்தையும், 7 பேர் இரண்டாம் இடத்தையும் பெற்று அகாடமிக்கு பெருமை சேர்த்துள்ளார்கள். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பெற்றோர்கள் வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்..



திண்டுக்கல் மாவட்டதையல் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் நத்தத்தில் மாவட்ட துணைச் செயலாளர் பொன். குழந்தைவேல் தலைமையில் இப்தார் விருந்து அளிக்கப்பட்டது.திமுக வடக்கு ஒன்றிய பொருளாளர் கலிபுல்லா,திமுக இளைஞரணி மாவட்ட துணை அமைப்பாளர் இப்ரில் ஆசித்,சிறுபான்மை நலப் பிரிவுஅமைப்பாளர் ஜபார் ,ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில் தையல் தொழிலாளர்கள் முப்பதுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் ராமமூர்த்தி மண்டலம் 3 வார்டு60 கோவில் வழிப்பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் கோவில் வழி பேருந்து நிலையத்தின் கட்டுமான பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் உடன் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் ராமமூர்த்தி மேற்பார்வையில் மற்றும் மாநகர நல அலுவலர் முருகானந் முன்னிலையில் மண்டலம்2 க்கு உட்பட்ட பகுதிகளில் நான்கு மண்டல சுகாதார குழுவினர் வணிக நிறுவனங்களில் தமிழக அரசு தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ள விற்பனை செய்யப்படுகிறது என பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வில் ஒன்பது வணிக நிறுவனங்களில் ஆய்வு செய்ததில் 50 கிலோ பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு 5000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

# சிவகங்கை மாவட்டத்தில் வேலைவாய்ப்பு முகாம்

சிவகங்கை மார்ச் 26

சிவகங்கை மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின்வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு மாதமும் இரண்டாம் அல்லது மூன்றாம் வெள்ளிக்கிழமையன்று சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது. அதன்படி, வருகின்ற 28.03.2025 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10.30 மணி அளவில் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறிவழிகாட்டும்மைய அலுவலக வளாகத்தில் சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது.



இம்முகாமில், வேலை அளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களுக்கு தேவையான ஆட்களை தேர்வு செய்து கொள்ளலாம். சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த வேலை நாடுநர்கள் இவ்வாய்ப்பினைப்பயன்படுத்தி தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பினைப் பெறலாம்.

மேலும், இம்முகாமில் இலவச திறன் பயிற்சிக்கான விண்ணப்பபடிவம், போட்டித் தேர்வுகளுக்கான இலவசப்பயிற்சி வகுப்பில் மாணவர் சேர்க்கை, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்ப படிவம் ஆகியவையும் வழங்கப்படும். எனவே, விருப்பமுள்ளவர்கள் பத்தாம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை மற்றும் ஐ.டி.ஐ, டிப்ளமோ படித்த இளைஞர்கள் தங்களது கல்விச்சான்று, குடும்ப அட்டை, வேலைவாய்ப்பு அடையாள அட்டை, ஆதார் அட்டையுடன் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம். இம்முகாமில் பணிவாய்ப்பு பெறுவோருக்கு பதிவு மூப்பு ஏதும் ரத்து செய்யப்படமாட்டது. எனவே வேலைநாடுநர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.



சென்னை அடுத்த தாம்பரம் சண்முகம் சாலையில் சமூகநீதி மாணவர் இயக்கம் சார்பில் பாலஸ்தீனம் காசாவில் படுகொலை செய்து வரும் இஸ்ரேலை கண்டித்து சமூக நீதி மாணவரணி மண்டல செயலாளர் ஜெய்னுல் ஆபீதின் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் இளைஞரணி செயலாளர் தமீம் அன்சாரி, பொறுப்பாளர் சல்மான் பாரிஸ் உட்பட சமூக நீதி மாணவர் இயக்க நிர்வாகிகள் கலந்து கொண்டு பாலஸ்தீனர்களை கொன்று குவிக்கும் இஸ்ரேலுக்கு எதிராக கண்டன பதாகைகள் ஏந்தியவாறு கோஷமிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர் நாள் கூட்டம்

தூத்துக்குடி, மார்ச்.26

தூத்துக்குடி கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில், கலெக்டர் இளம்பகவத் தலைமையில் திங்கள்கிழமை மக்கள் குறைகளையும் நாள் கூட்டம் நடைபெற்றது.



முன்னதாக மாற்றுத்திறனாளிகளை நேரில் சந்தித்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 46கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டு அவர்களின் கோரிக்கைகளை கனிவுடன் கேட்டறிந்தார். அதனைத் தொடர்ந்து, நலத்திட்ட உதவிகளை வழங்கினார். கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் இரவிச்சந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சேதுராமலிங்கம், சமூக பாதுகாப்புத் திட்டதனித் துணை ஆட்சியர் ஹபிபூர்ரஹ்மான், உதவிஇயக்குநர்(ஊராட்சிகள்) சாந்தி, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நலஅலுவலர் பிரம்மநாயகம், துணை ஆட்சியர் (பயிற்சி) சத்யா மற்றும் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# காரைக்குடி டாக்டர் உமையாள் இராமநாதன் மகளிர் கல்லூரியில் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் - பேரணி

காரைக்குடி மார்ச் 26




சிவகங்கை மாவட்ட சாலைப் பாதுகாப்புப் படை, டாக்டர் உமையாள் ராமநாதன் மகளிர் கல்லூரி நாட்டு நலப்பணி திட்டம் இணைந்து சாலை பாதுகாப்புவிழிப்புணர்வுநிகழ்வு கல்லூரியின் நுழைவாயிலில் நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் முனைவர் ஹேமமாலினி கணேசன் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினர்களாக காரைக்குடி காவல் துணைக் கண்காணிப்பாளர் பார்த்திபன் காரைக்குடி போக்குவரத்து காவல் நிலைய காவல் ஆய்வாளர் .பாஸ்கர் சிவகங்கை மாவட்ட சாலைப் பாதுகாப்புப் படை ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஜெ.பிரகாஷ்மணிமாறன் காரைக்குடி போக்குவரத்து காவல் நிலைய சார்பு ஆய்வாளர் மாடசாமி அழகப்பாபுரம் காவல் நிலைய சிறப்பு ஆய்வாளர் சரவணகுமார் கலந்து கொண்டனர் .பொது மக்களிடையே போக்குவரத்து



விழிப்புணர்வு சின்னங்களை காண்பித்து வினா எழுப்பி பரிசுகள் வழங்கப்பட்டது. 100 க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் மா.ஜோதிமுத்து மற்றும் சிலம்புச்செல்வி மற்றும் முனைவர் இரா. பிரபாவதி இந்நிகழ்வை ஒருங்கிணைத்தனர்.

# காரைக்குடியில் செயற்கை நுண்ணறிவு பற்றிய தெளிவான விளக்க உரை நிகழ்வு

சிவகங்கை, மார்ச்.26

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் செயற்கை நுண்ணறிவுபற்றிய தெளிவான விளக்க உரை நிகழ்வு கோவிலூர் நாச்சியப்ப சுவாமிகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் செயற்கை நுண்ணறிவு பற்றிய தெளிவான விளக்க உரை நிகழ்வுகடந்த 22.03.2025 அன்று நடைபெற்றது. கோவிலூர் மடாலயக் கல்விக் குழுமத்தின் தாளாளர் மா. வீரப்பன் நிகழ்வில் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் முனைவர் ரெ. சந்திரமோகன் சிறப்புரை ஆற்றினார். புதுச்சேரி பள்ளிக் கல்வி இயக்குநரகத்தின் கீழ் உள்ள சமக்ர ஷிக்ஷாவின்(Sa-



magra Shikha) மாநில ஒருங்கிணைப்பாளரான ட. சைமன் பீட்டர் பால் செயற்கை நுண்ணறிவு பற்றிய தெளிவான விளக்க உரை ஆற்றினார். இதில் எவ்வாறு செயற்கை நுண்ணறிவை(AI) எளிமையாக கையாளலாம் என்பதை இந்நிகழ்வில் கலந்துகொண்ட கோவிலூர் மடாலயக் கல்விக் குழுமத்தின் அனைத்து ஆசிரியர் மற்றும் பேராசிரியர்களுக்கு செய்முறைப் பயிற்சியின் மூலம் விரிவாக விவரிக்கப்பட்டது. மேலும் இந்நிகழ்வில் கல்வி ஒருங்கிணைப்பாளர் திருமதி ராஜேஸ்வரி கலந்துகொண்டு சிறப்பித்தார். நிகழ்வின் முன்னதாக கணினி அறிவியல் துறைத் தலைவர் முனைவர் கலா வரவேற்புரை வழங்கினார். நிகழ்வின் நிறைவாக உடற்கல்வியியல் கல்லூரியின் முதல்வர் ரவீந்திரன் நன்றியுரை நல்கினார். நிகழ்வில் கோவிலூர் மடாலயக் கல்விக் குழுமத்தின் அனைத்து ஆசிரியர் மற்றும் பேராசிரியர்களும் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# விருதுநகர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் ஆய்வு

விருதுநகர் மார்ச் 26

விருதுநகர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன்,நேற்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, அரசின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு அரசு திட்டப்பணிகள் மற்றும் நலத்திட்டங்களின் பயன்கள், கருத்துக்கள் குறித்து பயனாளிகளிடம் கலந்துரையாடினார்.

அதன்படி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம் புல்லலக்கோட்டை ஊராட்சி, கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ், ரூ.3.54 இலட்சம் மானியத்தில் புதிய வீடுகட்டப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு, இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்ற பயனாளியிடம் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களை கேட்டறிந்தார்.





புல்லலக்கோட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், ரூ.50 ஆயிரம் மதிப்பில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானத்தை நேரில் சென்று பார்வையிட்டு, பள்ளியில் அடிப்படை வசதிகள், பள்ளி குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்கப்பட்டு வரும் முறைகள், குழந்தைகளின் வாசிப்புத்திறன், எழுத்தறிவு குறித்து ஆசிரியர் மற்றும் மாணவர்களிடம் கேட்டறிந்து ஆய்வு செய்தார்.

புல்லக்கோட்டை ஊராட்சியில் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் ரூ.2.81 இலட்சம் மதிப்பில் மானியத்தில் குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு வருவதையும்,

சிவஞானபுரம் ஊராட்சியில் லட்சுமி நகரில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், ரூ.16.55 இலட்சம் மதிப்பில் புதிதாக அங்கன்வாடி மையம் கட்டப்பட்டு வருவதையும்,

செங்குன்றாபுரம் ஊராட்சியில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், ரூ.1.68 இலட்சம் மதிப்பில் கண்மாய் தூர்வாரப்பட்டு புணரமைக்கப்பட்டு வரும் பணிகளையும்,

எல்லிங்க நாயக்கன்பட்டி ஊராட்சியில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.50 ஆயிரம் மதிப்பில் பேட்மிட்டன் மற்றும் வாலிபால் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டுள்ளதையும், சந்திரகிரிபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில், பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளதையும் மாவட்ட ஆட்சியர் நேரில் சென்று பார்வையிட்டு பணிகளின் தரம் குறித்து ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, அரசின் மூலம் அந்தந்த ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்ட பணிகள் மற்றும் நலத்திட்டங்கள் முறையாக மக்களை சென்றடைகிறதா என பொதுமக்கள் மற்றும் பயனாளிகளிடம் கலந்துரையாடி, அவர்களின் கருத்துக்களை மாவட்ட ஆட்சியர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், கேட்டறிந்தார்.

மேலும் நடைபெற்று வரும் பணிகளை விரைவாகவும், தரமானதாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்மந்தப்பட்ட அரசு அலுவலர்களுக்கு அறிவுத்தினார்.

இந்த ஆய்வின் போது, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி செயற்பொறியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் உடன் இருந்தனர்.



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர். அழகுமீனா, தலைமையில் அரசு மருத்துவமனைகளில் பிரசவங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பாக மருத்துவர்கள் மற்றும் துறை அலுவலர்களுடன் கலந்தாய்வு மேற்கொண்டார்.

# மார்ச்.28ல் தென்காசி ஆட்சியரக கூட்டரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

தென்காசி மார்ச் 26

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் (28.03.2025) அன்று விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற உள்ளது மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர், தகவல் தெரிவித்துள்ளார்.




தென்காசி மாவட்டத்தில் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வருகின்ற (28.03.2025) வெள்ளிக்கிழமை காலை 11:00 மணிக்கு தென்காசி மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் நடைபெற உள்ளது. விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் தென்காசி மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து துறை அலுவலர்களும் பங்கேற்கிறார்கள்.

எனவே, அனைத்து வட்டார விவசாயிகளும் கலந்து கொள்வதோடு மனுவில் தங்களது கைபேசி எண்ணையும் குறிப்பிடக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விவசாய குறைதீர் நாள் கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து பெறப்படும் மனுவிற்கான ஒப்புகையும் மனுவின் கோரிக்கை தொடர்பான விபரங்களும் அனைத்து வகை கைபேசிகளிலும் பார்க்கும் வண்ணம் செயலி வாயிலாக குறுஞ்செய்தியாக அனுப்பப்படும். இக்குறைதீர் நாள் கூட்டத்தில் விவசாயம் தொடர்பான தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயனடையுமாறு தென்காசி மாவட்ட விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்துள்ளார்.

# செங்கல்பட்டு மாவட்டம் மனிதநேய வழக்குரைஞர்கள் சங்க இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி



செங்கல்பட்டு மார்ச்.26

செங்கல்பட்டு மாவட்டம் மனிதநேய வழக்குரைஞர்கள் சங்கம் நடத்தும் வழக்குரைஞர்கள் பங்கெடுக்கும் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி மாநில செயலாளர் எம்.முஜிபுர் ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது.

சிறப்பு அழைப்பாளர்களாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார்கவுன்சிலிங் தலைவர் பி.எஸ்.அமல்ராஜ், மனிதநேய மக்கள் கட்சி மாநில துணை பொது செயலாளர் தாம்பரம் மாநகராட்சிமாமன்ற உறுப்பினர் தாம்பரம் எம்.யாக்கூப் எம்சி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

தமுமுக மனிதநேய மக்கள் கட்சி செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் எஸ்.கே. ஜாகிர் உசேன் வரவேற்பு உரையாற்றினார்கள். மனிதநேய மக்கள் கட்சி தலைமை நிலைய செயலாளர் வழக்கறிஞர் எம்.ஜெயினுலாபுதீன், தாம்பரம் வழக்கறிஞர் சங்கம் தலைவர் ஸ்ரீராம், தாம்பரம் வழக்கறிஞர்கள் சங்க செயலாளர் பி.அர்ச்சுனன், பல்லாவரம் பார் அசோசியேஷன் தலைவர் ஆர்.மணிமாறன் மற்றும் வழக்கறிஞர்கள் கலந்து கொண்டார்கள். இறுதியாக செங்கல்பட்டு வடக்கு மாவட்ட வழக்குரைஞர்கள் சங்க செயலாளர் வழக்கறிஞர் எம்.பாதுஷா நன்றி உரையாற்றினார்கள்.

# அதிகளவு குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து விருதுநகர் மாவட்டம் மாநிலத்திலேயே முதலிடம்

விருதுநகர் மார்ச் 26

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், கடந்த (24.03.2025) அன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக 2023-24 ஆம் ஆண்டில் தமிழகத்திலேயே அதிகப்படியான குடும்ப நல அறுவை சிகிச்சை செய்தமைக்காக மாநில அளவில் முதல் மற்றும் இரண்டாமிடம் பெற்றமைக்காக விருதுகள் பெற்ற மருத்துவ அலுவலர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலனிடம் பெற்ற விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.







அதன்படி, தமிழ்நாட்டிலுள்ள அரசு மருத்துவமனைகளில் 2023 24 ஆம் ஆண்டில் நடைபெற்ற குடும்பநல அறுவை சிகிச்சைகளில் 4129 குடும்ப நல அறுவை சிகிச்சைகள் செய்து மாநிலத்திலேயே விருதுநகர் மாவட்டம் முதலிடம் பெற்றுள்ளது.

மேலும், 2023 24 ஆம் ஆண்டில் மாநில அளவில் ஆரம்பசுகாதார நிலையங்களில் நடைபெற்ற குடும்ப நல அறுவை சிகிச்சைகளில் 354 பெண்களுக்கான குடும்ப நல அறுவை சிகிச்சைகள் செய்து, விருதுநகர் மாவட்டம், கன்னிசேரிபுதூர் ஆரம்ப சுகாதார நிலையம் இரண்டாமிடம் பெற்றுள்ளது.

அதன்படி, முதலிடத்திற்கான விருதினை பெற்ற இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.பாபுஜி அவர்களும், இரண்டாமிடத்திற்கான விருதினை பெற்ற கன்னிச்சேரிபுதூர் வட்டார மருத்துவ அலுவலர் மரு.ஆரோக்கிய ரூபன்ராஜ் மற்றும் மாவட்ட ஆட்சியர் முனைவர் வீ.ப.ஜெயசீலன்,இடம் பெற்ற விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

இந்நிகழ்வில் துணை இயக்குநர்(குடும்ப நலம்) மரு.விமலா அவர்கள், விருதுநகர் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.யசோதாமணி, துணை இயக்குநர்(காசம்) மரு.கே.ராஜன், துணை இயக்குநர்(தொழுநோய்) மரு.மணிகண்டன், மருத்துவ அலுவலர்கள், அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# மதுரை மாநகராட்சி பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாம் - மேயர் ஆய்வு





மதுரை, மார்ச்.26

மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (கிழக்கு) அலுவலகத்தில் பொது மக்கள் குறைதீர்க்கும் முகாம் மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள், ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன், ஆகியோர் தலைமையில்நடைபெற்றது.

மதுரை மாநகராட்சி மண்டலம் 1 (கிழக்கு) அலுவலகத்தில் நடைபெற்ற பொது மக்கள் குறைதீர்க்கும் முகாமில் வரி திருத்தம் வேண்டி 13 மனுக்களும், பாதாளச் சாக்கடை மற்றும் குடிநீர் இணைப்பு, சாலை வசதி, தெருவிளக்கு மற்றும் அடிப்படை வசதி வேண்டி 14 மனுக்களும், சுகாதாரம் தொடர்பாக 2 மனுக்களும், ஆக்கிரமிப்பு தொடர்பாக 6 மனுக்களும், இதர கோரிக்கைகள் தொடர்பாக 2 மனுக்களும் என மொத்தம் 37 மனுக்கள் பொதுமக்களிடம் இருந்து மேயரால் நேரடியாக பெறப்பட்டது.

தொடர்ந்து மண்டலம் 1 வார்டு எண்.14 புதூர் மண்மலை மேடு கல்குளம் மற்றும் தண்டலை வாய்க்கால் பகுதிகளில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்வது குறித்து மேயர், ஆணையாளர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

முன்னதாக மண்டலம் 3 வார்டு எண்.50 வைகை தென்கரை அனுமார் கோவில் படித்துறை பகுதியில் உள்ள அனுப்பானடி வாய்க்கால் தூர்வாரும் பணியினை மேயர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தேவையற்ற குப்பைகளை உடனுக்குடன் அகற்றி மழைநீர் சீராக செல்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் கூறினார்.

இம்முகாமில் துணை மேயர் தி.நாகராஜன், மண்டலத் தலைவர்கள் வாசுகி, பாண்டிச்செல்வி, உதவி ஆணையாளர் மணியன், செயற்பொறியாளர் (திட்டம்) திருமதி.மாலதி, மக்கள் தொடர்பு அலுவலர் மகேஸ்வரன், உதவி நகர்நல அலுவலர் மரு.அபிஷேக், செயற்பொறியாளர் சேகர், உதவி வருவாய் அலுவலர் திரு,லோகநாதன், உதவிப் பொறியாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடியில் இப்தார் நோன்பு நலத்திட்ட உதவி வழங்கிய அமைச்சர் கீதாஜீவன்

தூத்துக்குடி, மார்ச்.26

தூத்துக்குடியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் சிறுபான்மை பிரிவு மற்றும் தமிழ்நாடு இஸ்லாமிய கூட்டமைப்பு இணைந்து பல சமய தலைவர்களும் பங்கேற்கும் சமூக நல்லிணக்க இஸ்லாமியர்கள் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழ்நாடு இஸ்லாமிய கூட்டமைப்பு மாவட்ட தலைவர் செய்யது அலி தலைமை வகித்தார். காங்கிரஸ் சிறுபான்மை பிரிவு மாவட்ட தலைவர் மைதீன் முன்னிலை வகித்தார்.



வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான கீதாஜீவன் மத நல்லிணக்க இஃப்தார் நோன்பு துவக்கி வைத்து 200 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசுகையில் இஸ்லாமியர்கள் செய்யக்கூடிய தியாகத்தை போற்றுவோம். ஏழை எளிய மக்களின் தேவைகளை உணர்ந்து அவர்களுக்கும் உதவிட வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு நலத்திட்ட உதவிகள் செய்ய ரமலான் பண்டிகையில் ஒரு பகுதியாக இஸ்லாமிய சமுதாயத்தினர் செய்து வருவது மகிழ்ச்சியளிக்கிறது.

இந்திய அரசின் அமைப்பின் சட்டத்தின் கீழ் பெரும்பான்மையினர் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று தான் வழங்கப்பட்டிருக்கிறது அந்த ஒரு அரசமைப்பு சட்டத்தின் உரிமையை கூட இன்று எடுத்து விட வேண்டும், நசுக்கி விட வேண்டும் சிறுபான்மையினர் இல்லாத நிலை உருவாக்க வேண்டும் என்றெல்லாம் மத்தியில் இருக்கக்கூடிய ஒன்றிய பாஜக அரசு முயற்சித்து வருகிறார்கள். அதை நோக்கி பயணித்து வருகிறார்கள். ஒற்றுமையே பலம் என்று மனதில் வைத்து அனைவரும் என்றும் சகோதரத்தோடு ஒற்றுமையோடு ஒருவருக்கொருவர் பழகுவோம் என்று கூறி ரமலான் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்று பேசினார்.

நிகழ்ச்சியில் மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் முரளிதரன், தூத்துக்குடி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் ஷாஜகான், மாவட்ட செயலாளர்கள் ஜெபராஜ், கோபால், மண்டலதலைவர்கள் சேகர், செந்தூர்பாண்டி, வார்டு தலைவர்கள் மைதீன் பிச்சை, குமேத்ஜெராசின், மாநகர திமுக இலக்கிய அணி அமைப்பாளர் ஜீவன்ஜேக்கப், தமிழக வாழ்வுரிமை கட்சி மாவட்ட தலைவர் கிதர் பிஸ்மி, துணைச்செயலாளர் அஜீஸ், ஜாமியா பள்ளிவாசல் பொறுப்பாளர் ரகுமான், வியாபாரிகள் சங்க தலைவர் மீராசா, மனித நேய மக்கள் கட்சி மாவட்ட பொறுப்பாளர் அகமது இக்பால், நற்செய்தி நடும் இயக்குனர் பென்சிகர் லூசன், அய்யா வழி கிருஷ்ணவேணி கணேசன், ராஜலட்சுமி, இஸ்லாமியர் கூட்டமைப்பு சம்சுதீன், பெருமாள் கோவில் அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், மற்றும் மணி, அல்பட், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், இந்து அமைப்பைச் சேர்ந்தவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# நிலக்கோட்டை அரசு மகளிர் கல்லூரியில் பசுமை கருத்தரங்கம்

வத்தலகுண்டு மார்ச்.

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின், கட்டுப்பாட்டில் இயங்கும் நிலக்கோட்டை அரசு மகளிர் கலைக்கல்லூரியில் பசுமை வளர்ச்சி: இந்திய சவால்களும் தீர்வுகளும் ஒருநாள் பயிலரங்க கருத்தரங்கம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.






இந்த பயிலரங்க கருத்தரங்கிற்கு, நிலக்கோட்டை அரசு மகளிர் கலைக்கல்லூரி முதல்வர், முனைவர் கீதா தலைமை வகித்தார். மதுரை சரஸ்வதி நாராயணன் கல்லூரியின் வணிகவியல் துறை தலைவர் கூடுதல் பேராசிரியர், முனைவர் ஜெயக்கொடி தலைமையுரையாற்றினார்.

இந்த பயிலரங்க கருத்தரங்கை ஒருங்கிணைப்பு செயலாளர் துணை பேராசிரியர், முனைவர் திலீபன் செய்திருந்தார். ஒருநாள் பயிலரங்க கருத்தரங்கை இணை அமைப்பு செயலாளர் துணை பேராசிரியர், கார்த்திகேயன் வடிவமைத்திருந்தார். கருத்தரங்கிற்கு கணித துறை தலைவர் பேராசிரியர் முனைவர் சீனிவாசகன், பொருளாதார துறை தலைவர் முனைவர் முருகவேல், ஆங்கில துறை தலைவர் பேராசிரியர் முனைவர் லதா, வணிக நிர்வாகவியல் துறை தலைவர் முனைவர் செந்தில் குமார், பொருளாதார துறை துணை பேராசிரியர் முனைவர் சின்னச்சாமி முன்னிலை வகித்து பேசினார்கள்.

இந்த பயிலரங்க கருத்தரங்கில் திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், கரூர் மாவட்டங்களைச் சேர்ந்த கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டு ஆய்வு அறிக்கையை சமர்ப்பித்தனர்.


கருத்தரங்கை முனைவர்கள் சுபாஸ்ரீ, முனைவர் தேவிப்பிரியா, முனைவர் அல்போன்சா, முனைவர் தாட்சாயிணி, திவ்வியலெட்சுமி, விஜயலட்சுமி ஆகியோர் ஒருங்கிணைத்தனர்

# வத்தலகுண்டு சிங்கார கோட்டை பண்ணைக்காடு வீரம்மாள் பரமசிவம் கலை கல்லூரியில் 20 வது பட்டமளிப்பு விழா

வத்தலகுண்டு மார்ச்.26

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு அருகே உள்ள சிங்கார கோட்டை பண்ணைக்காடு வீரம்மாள் பரமசிவம் கலைக்கல்லூரியின் 20 வது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் உள்ள அன்னை தெரேசா கலையரங்கில் நடைபெற்றது இந்நிகழ்ச்சிக்கு விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெயசீலன் தலைமை வைத்து மாணவர்களுக்கு பட்டம் வழங்கி தலைமையுறை ஆற்றினார் மதுரை காமராஜர் பல்கலைக்கழக வளர்ச்சி குழு இயக்குனர் கண்ணதாசன் கலந்துகொண்டு பட்டங்களை வழங்கினார். பண்ணைக்காடு வீரம்மாள் பரமசிவம் கல்லூரியின் தலைவர் முனைவர் பண்ணை செல்வக்குமார்



வரவேற்று பேசினார் முதல்வர் உபகார செல்வம் அறிக்கை வாசித்தார் இந்நிகழ்ச்சியில் மதுரை மாநகராட்சி செய்தி தொடர்பாளர் மகேஸ்வரன் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையின் சட்ட ஆலோசகர் திருப்பதி தொழிலதிபர் ஈடன் கார்டன் கென்னடி பண்ணைக்காடு வீரம்மாள் பரமசிவம் கல்வி குழும சட்ட ஆலோசகர் ராஜபாண்டியன் மற்றும் ராதா வடமலையான் கலந்ஆகியோர்து கொண்டு பட்டங்களை வழங்கினார்கள் நிகழ்ச்சியில் 550 மாணவ மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கி சிறப்பித்தனர் மேலும் பட்டமளிப்பு உரை நிகழ்த்திய விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெயசீலன் கூறும்போது இந்திய நாட்டைச் சேர்ந்தவர்கள் கணிதத்தில் வல்லுனர்களாக விளங்கினார்கள் சக்கரத்தை கண்டுபிடித்து அதை செயல்படுத்தி காட்டியவர்கள் சாதாரண மனிதர்களே ஒரு துறையில் தங்களுடைய சாதனையை வளர்த்துக் கொண்டால் அதில் வல்லுநர் ஆகலாம் என தெரிவித்தார். இறுதியில் கணிதத்துறை தலைவர் ராமச்சந்திரன் நன்றி கூறினார்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161